பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம்!

திருவள்ளூர்: மார்ச்6– திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் கல்லூரி வளாக அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

டெக்னோரமா 2k26 (26/02/2026), அட்டூன் 2k26 (26/02/2026), மெகாட்ரான் 2k26 எனும் தான்கு முக்கிய தொழில்நுட்ப நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இந்த தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு நிகழ்ச்சி அமைந்திருந்தது. மேலும் இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 500 க்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துக்கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில், சிஎஸ்இ,செயற்கை நுண்ணறிவு மற்றும் டி.எஸ்,செயற்கைநுண்ணறிவு மற்றும் எம்.எல்,சைபர் பாதுகாப்பு,

சி.எஸ்.பி.எஸ்இ,இயந்திர பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல், புதுமத்தினை ஊக்குவித்தல் மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவை இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்த்தாய்வாழ்த்துடன் தொடங்கி, குத்துவிளக்கு ஏற்றுதல் மற்றும் கருத்தரங்க டீசர்வெளியீடு ஆகியவற்றுடன் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ஆர்.தாராவளைபி அவர்கள் முன்னிலைவகித்து தொழில்நுட்ப கருத்தரங்கின் மாணவர்களின் நடைமுறை அறிவுதலைமையியல் நிரள் மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்தும் முக்கியத்துவம் குறித்துஎடுத்துக்கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகஸன்டைராக்டர் இயக்குனர் பி.ரோ.ஆனந்த் அவர்கள் கலந்துகொண்டு தற்போது உருவெடுத்துவரும் தொழில்நுட்பங்கள் டிஜிட்டல் மாற்றம் புதுமை மற்றும் தொழில் தயார் நிலை குறித்து மாணவர்களுக்கு எடுத்துக் கூறி சிறப்புரையாற்றி பேசினார்.

இறுதியாண்டுமாணவர் பிரதிநிதிகள் தங்களது துறைகளின் நிகழ்வுகளை அறிமுகப்படுத்தினர்.

இக்கருத்தரங்க பொறுப்பாளராக கணினி அறிவியல் துறை தலைவர் டாக்டர் பி.மகேஷ் அவர்கள் செயல்பட்டார்.

எஸ்.பிரவீனா அவர்கள் கருத்தரங்கு நிகழ்ச்சிக்குஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு இந்நிகழ்ச்சியை சிறப்பாகநடத்திமுடித்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்களில் பணிபுரிபவர்களுக்கு பயிற்சி

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026முன்னிட்டு பறக்கும் படைமற்றும்நிலை கண்காணிப்பு குழுக்களில் பணிபுரிபவர்களுக்கு பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

திருவண்ணாமலைமாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கதர்ப்பவராஜ்,(05.03.2026) அன்றுமாவட்ட ஆட்சியர் அலுவலகவளாகத்திலுள்ள மக்கள் குறைத்தீர்வு கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றபொதுத்தேர்தல் 2026முன்னிட்டு பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்களில் பணிபுரிபவர்களுக்கான பயிற்சிவகுப்பினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 தொடர்பாகதிருவண்ணாமலை மாவட்டத்தில்தேர்தல்நடத்தை விதிகள் மற்றும் விதிமுறைகள் மீறி பணம் மற்றும் இதர பொருட்களை எடுத்துச் செல்லுதல், சட்டவிரோதமாக வாக்காளர்களுக்கு பணம் வழங்குதல் குறித்து கண்காணிக்கஎதுவாக 24 மணி நேரம் இயங்கும் வகையில் பறக்கும் படை மற்றும்நிலைகண்காணிப்பு குழுக்கள்(தேர்தல்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டஉள்ளனர்.

இக்குழுக்களில்பணிபுரிய ஒருசட்டமன்றதொகுதிக்கு 3 பறக்கும் படை (நிதிஒவீடீரீ விஜிலன்ஸ்பீ) மற்றும்3நிலை கண்காணிப்பு குழுக்கள்) என்ற வீதம் மொத்தம் 6 குழுக்கள் மூன்று சுழற்சி முறையில் மொத்தம் 18 குழுக்கள் ஈடுபடுத்தப்பட உள்ளன.திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 144 குழுக்கள் 24 மணி நேரமும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தேர்தல்பணிகளைமாற்றவிருக்கின்றனர். அதன்படி சட்டமன்றதொகுதி வாரியாகநியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும்காவலுக்கு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் இன்றைய தினம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரால் இந்தியதேர்தல் ஆணையவழிகாட்டுதலின்படி உரிய பயிற்சிகளும், தேர்தல் நடத்தை விதிகள் குறித்து வழிகாட்டுதல்களும் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன்,சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள்,உதவிதேர்தல் நடத்தும் அலுவலர்கள்மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் வனத்துறை சார்பில் வனம் - வன உயிரின பாதுகாப்பு சவால்கள் - தீர்வுகள் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி நிறைவுச் சான்றிதழ்களை வழங்கினார்

திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் வனத்துறைசார்பில்நடைபெற்ற நிகழ்ச்சியில் வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு சவால்கள் மற்றும் தீர்வுகள் பயிற்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி நிறைவுச் சான்றிதழ்களை வழங்கினார்.

திருவண்ணாமலைமாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன் தலைமையில் (04.03.2026) அன்றுமாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் வனத்துறை சார்பில் வனம் மறறும் வன உயிரின பாதுகாப்பு சவால்கள் மற்றும் தீர்வுகள் பயிற்சித்திட்டத்தின் கீழ் அரசு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி நிறைவுச் சான்றிதழ்வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வனவிலங்கு பாதுகாப்பு காவலர்களாக இளம் தலைவர்களை உருவாக்கும் பொருட்டு, வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு சவால்கள் மற்றும் தீர்வுகள் " என்னும் தலைப்பில், வனப்பாதுகாப்பு காட்டுத்தீ மேலாண்மை, வன விலங்கு களைக்கெடுப்பு மறறும் மனித விலங்கு மோதல் மேலாண்மை போன்ற துறைகள் தொடர்பான குறுகிய கால பயிற்சியாக, திருவண்ணாமலைமாவட்ட அரசு பள்ளி ஆசிரியர்கள் மறறும் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

2025 2026 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில், வனத்துறை மானியகோரிக்கையின்போது, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படி, வனவிலங்கு பாதுகாப்பு காவலர்களாக இளம் தலைவர்களை உருவாக்கும் பொருட்டு, வனம் மறறும் வன உயிரின பாதுகாப்பு சவால்கள் மற்றும் தீர்வுகள் என்னும் தலைப்பில், வனப்பாதுகாப்பு காட்டுத்தீ மேலாண்மை, வன விலங்கு களைக்கெடுப்பு மறறும் மனித விலங்கு மோதல் மேலாண்மை போன்ற துறைகள் தொடர்பாக, தமிழகம் முழுவதும் அரசு பள்ளிகளில் பயிலும் 20,000 மாணவர்களுக்கு, குறுகிய கால பயிற்சி வழங்க. ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்படி திருவண்ணாமலை வனக்கோட்டத்திற்குட்பட்ட அரசு பள்ளி மறறும் மாணவர்களுக்கு வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு சவால்கள் மற்றும் தீர்வுகள் என்னும் தலைப்பில், அரசு பள்ளி ஆசிரியர்கள் 25 மறறும் மாணவர்கள் 500 நபர்களுக்கு, கருத்தியல் மறறும் செயல்முறை வகுப்புகள் மொத்தம் 20 மணிநேரம் வகுப்பாகவு 3 வார காலத்திற்குள் நடத்தி முடிக்கப்பட்ட நினை தொடர்ந்து, பயிற்சிபெற்ற மாணவர்கள் மறறும் ஆசிரியர்களுக்கு பயிற்சி கையேடுகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு பயிற்சியினை வழங்கவும், பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவிற்கும், மொத்தம்ரூ.150 லட்சம் நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது. மேலும்,

இந்த பயிற்சியில் பங்கெடுத்து வருங்கால இயற்கை காவலர்களை உருவாக்கஉள்ள ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொருவருக்கும் ரூ.2000/ வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் கு.சுதாகர் உதவி வனப்பாதுகாவலர் கு.வினோத்ராஜ், முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ், வனச்சரக அலுவலர் மகேஷ்வேல், அரசுப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும்மாணவர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிளெனீகிள்ஸ் மருத்துவமனையின் டாக்டர் பத்மப்பிரியா 500 'டா வின்சி' ரோபோடிக் அறுவைச் சிகிச்சைகளை நிறைவு செய்து சாதனை

சென்னை,06 மார்ச்சு 2026.சென்னை கிளெனீகிள்ஸ் மருத்துவமனையின் மகப்பேறு மற்றும் மகளிர் நலத்துறை இயக்குநரும், முன்னணி ரோபோடிக் அறுவைச் சிகிச்சை நிபுணருமான டாக்டர் பத்மப்பிரியா விவேக், 'டா வின்சி' ரோபோடிக் முறையைப் பயன்படுத்தி 500 மகளிர் நல அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளார். 22 ஜூன் 2023 அன்று இந்த ரோபோடிக் சிகிச்சைத் திட்டத்தைத் தொடங்கியதில் இருந்து, மூன்றாண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே இந்த மைல்கல்லை அவர் எட்டியுள்ளார். பெண்களுக்கான சிறுநீரக அறுவைச் சிகிச்சை (முறையில் அவரது நீடித்த மருத்துவ அனுபவத்தையும், நோயாளிகளின் பாதுகாப்பையும், தரமான சிகிச்சை முடிவுகளில் அவர் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் இந்தச் சாதனை உறுதிப்படுத்துகிறது.

டாக்டர் பத்மப்பிரியா விவேக் மேற்கொண்ட இந்த 500 சிகிச்சைகளில் சிக்கலான கருப்பைகளற்றம், நீரகச்கட்டி அகற்றம், நீலிர எண்டோமெட்ரியோசிஸ், அதிக ஆபத்துள்ள மகளிர் நல புற்றுநோய் சிகிச்சைகள் எனப் பல்வேறு பிரிவுகள் அடங்கும் இதில்குறிப்பிடத்தக்க சாதனையாக, உலகளாவிய அங்கீகாரம் பெற்ற 5 நிலை கருப்பை நார்த்திசுக்கட்டியை ரோபோடிக்முறையில் அவர் அகற்றியது அமைந்தது. மிகவும் சவாலான இத்தகைய சிகிச்சைகளில், நவீன தொழில்நுட்பம் எவ்வாறு அறுவியமாகவும் கட்டுப்பாட்டுடனும்செயல்பட உதவும்என்பதற்கு இதுஒரு சிறந்த உதாரணமாகும். 'டா வின்சி' ரோபோடிக் முறையில் மேற்கொள்ளப்படும் இந்த அறுவைச் சிகிச்சைகள், குறைந்த இரத்தப்போக்கு விரைவாக குணமடைதல், மிகக் குறுகிய காலம் மருத்துவமனையில் தங்குதல் போன்ற நன்மைகளை வழங்குகின்றன. இது பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், அவர்களின் நீண்டகால வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்கிறது.

டாக்டர் பத்மப்பிரியா விவேக்கின் இந்த மைல்கல் சாதனை, இந்தியாவில் பெண்களுக்கான மேம்பட்ட எளிதில் அணுகக்கூடிய, மற்றும் நோயாளிகளை மையமாகக் கொண்ட சிகிச்சைமுறைகளின் பரந்த பரிணாம வளர்ச்சியை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. உயர்தர அறுவைச் சிகிச்சை பிரிவுகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது அவசியமாக உள்ள இந்த காலகட்டத்தில், தொழில்நுட்பம் சார்ந்த அறுவைச் சிகிச்சைகளில் அவரது இந்த சாதனை ஒரு தலைமைத்துவத்தை பிரதிபலிக்கிறது. இதுமருத்துவத் துறையில் உள்ள மேலும் பல பெண்கள் புதுமையான தொழில்நுட்பங்களை நோக்கி பணிக்கணக்கமிப்பதோடு, சிக்கலான ரோபோடிக் சிகிச்சை நிட்டங்களில் பெண் அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் பங்களிப்பை அதிகரிக்கவும்உதவுகிறது. 'டா வின்சி' போன்ற அறுவைச் சிகிச்சை தொழில்நுட்பங்களில் அவர் கொண்டுள்ள தொடர்ச்சியான ஈடுபாடு, திறமையான மற்றும் கணிவான சிகிச்சையை வழங்க உறுதுணையாக இருக்கிறது. இது அறுவைச் சிகிச்சையின் தரமறையான முடிவுகள், விரைவான உடல்நல முன்னேற்றம், மறறும் பெண்களின் ஆரோக்கியமான வாழ்க்கைத் தரம் ஆகியவற்றிற்கு பங்களிக்கிறது.

திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் திருத்தணி தொகுதியில் செயல் வீரர்கள் கூட்டம் மாவட்டத் தலைவர் வழக்கறிஞர்

திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் திருத்தணி தொகுதியில் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் சசிகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றதுஇந்த கூட்டத்தில் முன்னாள் மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஏழுமலை பிரபாகரன் மாநில பொதுக்குழு உறுப்பினர் வெங்கட்ராஜ் செயலாளர் பிரிவின் மாநில தலைவர் கந்தரவேல் மாநில செயலாளர் வழக்கறிஞர் கோவிந்தராஜ் மாநில ஒபிசி பிரிவின் செயல் தலைவர் ஜேகேவெங்கடேஷ் மாநில இளைஞர் காங்கிரஸின் பொதுச்செயலாளர்

இதியாஸ் மாநில மகளிர் அணி துணைத் தலைவர் மாதவிராஜா .

தியாகராஜன் நகர்த் தலைவர்கள் ராமகிருஷ்ணன் ,ரமேஷ் சிவக்குமார் வட்டார தலைவர்கள் ஜெகதீஷ் காமராஜ் ராஜீவ் காந்தி ஏழுமலை இப்ராஹிம் மாத்தையன் வெங்டேசன் முருகன் பூபாலன் கிருஷ்ணன் மற்றும் சிறுபான்மை பிரிவின் தலைவர் கலீல் ரகுமான் பொன்னுரங்கம் சீனிவாசன் வேலு பார்த்திபன் மத்தூர் முருகன் அன்பு பாத்ரவிஸ்கே மாவட்ட செயலாளர் ராமன் பிரவின் கார்த்திக் இயேசு பாதம் உட்பட அனைத்து காங்கிரஸ் பேரியக்கதொண்டர்களும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர் <Thismessage was edited> திருத்தணி சட்டமன்ற தொகுதி செயல்வீரர் கூட்டம்மாவட்ட தலைவர் திரு.வி. சசிகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது .இதில்சிறப்பு அழைப்பாளர் திருவள்ளூர் பாராளுமன்ற பொறுப்பாளர் திரு.கி.நி.கிரிபிரபாகரன் அவர்கள் , மற்றும்

வெங்கட் ராஜா , கந்தரவேல்,கோவிந்தராஜ், கி.இயாஸ்,கலீல் ரகுமான், பி.ரி.வெங்டேசன் ,

மாதவிராஜா தலைவர்கள் ராமகிருஷ்ணன் ,ரமேஷ், சிவகுமார் ,தியாகராஜன், முருகன்

வட்டார தலைவர்கள் ஷி ஷி ஜெகதீஷ் ,மதியன், இப்ராஹிம் , ஏழுமலை , காமராஜ் ,ராஜீவ்காந்தி , மெக்காவிக் முருகன், பூபாலன், கிருஷ்ணன் , ராஜேந்திரன் ,வெங்கட்சன் , ராமன் .

நரலன், பொன்னுரங்கம் ,சீனிவாசன் ,சித்தா ,சந்தியா

சேலம் மேற்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியகழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி அன்னதானம் வழங்கியும் கொண்டாடினார்கள். எல் ஆர் சிலவிங்கம் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மாதிலங்கனவை உறுப்பினர் வழிகாட்டுதலின்படி ராஜேந்திரன் கற்றுலாத்துறை அமைச்சர் தலைமைத் தீ.சிவராமன் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திமுக முன்னிலை ஆர் சத்யராஜ் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியஇளைஞர்ணி துணை அமைப்பாளர் மற்றும் திமுக கழக முன்னோடிகள் திமுக கட்சி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது

சேலம் மேற்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியகழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி அன்னதானம் வழங்கியும் கொண்டாடினார்கள். எல் ஆர் சிலவிங்கம் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மாதிலங்கனவை உறுப்பினர் வழிகாட்டுதலின்படி ராஜேந்திரன் கற்றுலாத்துறை அமைச்சர் தலைமை தீ.சிவராமன் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திமுக முன்னிலை ஆர் சத்யராஜ் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியஇளைஞர்ணி துணை அமைப்பாளர் மற்றும் திமுக கழக முன்னோடிகள் திமுக கட்சி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது

தமிழ்நாடு 2030 கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சியில் 14 முக்கிய .... 1-ம் பக்க தொடர்ச்சி...

அன்னல் அம்பேத்கர் அயலகஉயர் கல்வித்திட்டம் விரிவுபடுத்தப்படும். கிராமங்களை பெருனாதார வளர்ச்சி மையங்களாக மாற்றுவோம். தளர்ப்புறங்களுக்கு இணையான வசதிகளுடன் கிராமப்புறம் வளர்த்தெடுக்கப்படும். முதல் கட்டமாக 10 ஊராட்சிகளில் தற்போதே உத்தமர் காந்தி மாதிரி கிராம திட்டம் செயல்படுத்தப்படும். 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதே எங்கள் இலக்கு. ஐடி. ஏற்றுமதி ரூ. 6 லட்சம் கோடியாக 2 மடங்கு உயர்த்தப்படும்.

மாவட்டம் தோறும் நவீன தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும். கடல் கண்டு மீன் வளர்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்துவோம் .புதிய மீன் பண்ணைகள் அமைக்கப்படும்.

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் எம் ஆர் கே பி கதிரவன், புவனகிரி, சிதம்பரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு சென்னை அறிவாலயத்தில் விருப்ப மனு தாக்கல் செய்தார். அருகில் கட்சி நிர்வாகிகள்

சேலம் மாவட்டம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம்வடக்கு ஒன்றியம் கழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலின் பிறந்தநாள்விழாவில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி அன்னதானம் வழங்கியும் கொண்டாடினார்கள். எல் ஆர் சிலவிங்கம் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மாதிலங்கனவை உறுப்பினர் வழிகாட்டுதலின்படி ராஜேந்திரன் கற்றுலாத்துறை அமைச்சர் தலைமை தீ.சிவராமன் பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திமுக முன்னிலை ஆர் சத்யராஜ் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியஇளைஞர்ணி துணை அமைப்பாளர் மற்றும் திமுக கழக முன்னோடிகள் திமுக கட்சி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது

சிந்தனைத்துளி

சரியாக சிந்திக்க

எப்பொழுதும்
உங்களுக்காக நீங்களே
சிந்தித்துக் கொள்ளுங்கள்
அது தவறாக
இருந்தாலும் பரவாயில்லை
அப்போது தான்
அடுத்த முறை
சரியாக நீங்கள்
சிந்திக்க முடியும்.

இசைப்பிரியன்
கே.சங்கர்,
பெருங்களத்தூர்.

Owned and Published by MOHAMED IBRAHIM NO.6/30, Gulam Murthuza Street, Ellis Road, Chennai - 600 002 & Printed by E.SUDEESHKUMAR. at CHENNAI OFFSET PRINTERS 19/1,21/2,Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai-600 002. Editor MOHAMED IBRAHIM.